# தந்தை! (தந்தையர் தினம் இன்று – 21-06-2020)

ஆன்ற நல்வயதில் அறிவை நாம்தேட செறிவானக்
கதைகளை நாளும் தந்தவரே தந்தை!
தோன்றும் கேள்விகளைத் தொல்லையாய்க் கருதாது,
துலங்கும் வழியில் பதில் தந்தவரே தந்தை!
குன்றா இளவயதில் வாழ்வின் அடையளம் தனைச்
சொன்ன நம்முழு முகவரியேத் தந்தை!
தோன்றா ஐயங்களைநாம் துடைத்தெரிய வழிச்சொன்ன
தூண்டா மணி விளக்கே தந்தை!

சான்றோனாய் நமைக் காண, சத்திய வழிதன்னை
எந்நாளும் சொன்னவர் தானே தந்தை!
ஆன்றோர் கூறிய ஆயிரம் நல்வழியைச் அழகுடனே
சொல்லிக் கொடுத்தவர் தானே தந்தை!
என்றோ மறைந்தாலும் எந்நாளும் நம் இதயத்தில்
தானிருந்து, ஆள்பவர் தானே தந்தை!
குன்றா மணிவிளக்காய், இவ்வையத்துப் பெருநிதியாய்
அறிவைத் தந்தவர் தானே தந்தை!

- கு.ப. அசோகன் (4.45.PM-21-06-2020)



